Clr.No.19

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
------

IN THE COURT OF

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.320/2018 |
| Sessions | : | |
| | | Prosecution |
| Deposition of witness for | : | Defence Pw-3 |
| | | Court |
| Name | .. | திரு. செல்வகுமார் |
| Father's Name | .. | திரு.கஜேந்திரன் |
| Village | | |
| Taluk | .. | Thiruvottiyur |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 26 Date:13.05.2022 |

(Solmenly affirmed and oath taken under Act 10 of 1872)

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:-

பொதுவாக ஞாயிற்றுக்கிழமை மற்றும் அலுவலக விடுமுறையின் போது கிரிக்கெட் விளையாடுவது வழக்கம். நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடுவேன். கிரிக்கெட் விளையாட்டின் போது அவ்வப்போது நண்பர்களுக்குள் தகராறு ஏற்படும் என்றால் சரிதான். எம்எம்டிஏ மைதானத்தில் கிரிக்கெட் விளையாடுவோம். எங்களை தவிர வேறு சில நபர்களும் அந்த மைதானத்தில் கிரிக்கெட் விளையாடுவார்கள். மைதானத்தில் சுமார் 100 பேர் கிரிக்கெட் விளையாடுவார்கள் என்றால் சரிதான். மைதானத்தில் பந்துகள் வேறு நபர்கள் கிரிக்கெட் விளையாடும் இடத்திற்கு சென்றால் பந்தை எடுக்கும்பொழுது பேச்சுக்கள் எழும் என்றால் அது சரியல்ல. 15.07.2018 அன்று எத்தனை ஆட்டங்கள் விளையாடினோம் என்றால் சரியாக ஞாபகமில்லை பொதுவாக 3, 4 ஆட்டங்கள்

ஆடுவோம். 15.07.2018 அன்று முழுமையாக விளையாடியபின்பு அல்லது பாதியிலேயே பிரச்சினை ஏற்பட்டதா என்றால் விளையாட்டின் பாதியிலேயே பிரச்சினை ஏற்பட்டது. 15.07.2018 அன்று விளையாட்டின் நடுவே அலுவலத்தில் இருந்து எனக்கு போன் வந்தது என்றும் அங்கு சென்று நான் திரும்ப மைதானத்திற்கு வந்தேன் என்ற சங்கதியை முதல் விசாரணையில் நான் கூறவில்லை என்றால் சரிதான். விளையாட்டின்போது எதிரிகளுடன் நடந்த வாக்குவாதத்தை பற்றி அப்போது காவல்நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அன்றையதினம் மாலை 7.00 மணியளவில் நடந்த வாக்குவாதத்தின்போதும் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் நான் கொடுக்கவில்லை அங்கிருந்த மக்கள் 100 எண் மூலம் போலீசாருக்கு தகவல் கொடுத்தார்கள். மக்கள் போலீசுக்கு தகவல் கொடுத்தது சம்பந்தமாக முதல் விசாரணையில் நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

எனக்கு சம்பவத்தின்போது அடிப்பட்டதா என்றால் அடிப்படவில்லை. என் வீட்டின் முன்பு 5.00 மணிக்கு பிரச்சினை நடந்ததா என்றால் எனக்கு தெரியாது அந்நேரத்தில் நான் அங்கு இல்லை. அ.சா.1 என் அண்ணன் ஆஜர் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்த காரணத்தால் அவருக்கு அனுசரணையாக இந்நீதிமன்றத்தில் ஆஜராகி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. இந்நீதிமன்றத்தில் என் மீது வேறு ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 என் அண்ணனை மருத்துவமனைக்கு நான் மற்றும் அ.சா.2 என் அம்மா ஆட்டோவில் அழைத்து சென்றோம். விளையாட்டு மைதானத்தில் வேறு ஒரு நபர்களுடன் ஏற்பட்ட தகராறு வீட்டின் முன்பு கலவரம் ஆனது என்றும் அந்த தள்ளுமுள்ளில் அ.சா.,1க்கு அடிப்பட்டது என்றும் ஆஜர் எதிரிகள் மீது பொய்யாக புகார் அளிக்கப்பட்டுள்ளதும் என்று சொன்னால் சரியல்ல.